# ஈழத்துத் தேசத்துக் கோயிலான திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் மீதான அண்மைக்கால ஆய்வு – ஒரு நோக்கு

ந. சுபராஜ்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**
கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில் பழம்பெரும் சிறப்புக்கள் வாய்ந்தவொரு திருத்தலமாகும். இன்று கிழக்கு வாழ் இந்து மக்களின் புராதன அடையாளமாக இவ்வாலயம் திகழ்கின்றது. இதனால் திருக்கோவில் ஒரு தேசத்துக் கோயிலாகச் சிறப்பிக்கப்படுகின்றது. இத்தலத்தின் பெருமைகள் அது பற்றிக் கூறப்படும் பழமை மிக்க ஐதீகக் கதைகள், நம்பிக்கைகள், அற்புதங்கள், நூல்கள் ஆகியவற்றினால் பறை சாற்றப்படுகின்றன. இருப்பினும் இவற்றை விட இவ்வாலயத்தில் உள்ள தொல்பொருட்கள் இத்தலத்தின் பெருமையையும், தொன்மையையும் வெளிப்படுத்தும் முக்கிய ஆவணங்களாகும். இவை பேணிப்பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். கல்வெட்டுக்கள், எழுத்துக்கள் பொறித்துள்ள தூண்கள், பழைய விக்கிரகங்கள், பூசைப்பொருட்கள் ஆகியன இவ்வாலயத்தின் தொன்மையைக் காட்டி நிற்கும் தொன்மங்களாகும். இவற்றுள் இங்குள்ள கல்வெட்டுக்களும் தூண்களும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய சிறப்பு வாய்ந்தனவாகும். இவை பற்றிய தொடர்ச்சியான ஆய்வுகள் இன்றியமையாதவை. இங்குள்ள கல்வெட்டுக்கள், தொல்பொருட்கள் பற்றிய பல ஆய்வுகள் இடம் பெற்றுள்ள போதும் நுட்பமான முடிவுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பது இவ்வாய்வின் பிரச்சினையாகும். இருப்பினும் தொடர்ச்சியான ஆய்வுகள் காத்திரமான மேலும் பல கண்டுபிடிப்புக்களை வெளிப்படுத்தலாம் எனும் கருதுகோளை முன்வைத்து அண்மைக்காலத்தில் இங்கு நடைபெற்ற தொல்பொருள் ஆராய்ச்சி பற்றிய ஒரு பார்வையினை இவ்வாய்வு செய்கின்றது.

**பிரதான சொற்கள்**: திருக்கோவில், தொல்பொருட்கள், தொன்மங்கள்

## ஆய்வு அறிமுகம்

ஈழத்தில் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் பெரும்பாலானவை புராதனச் சிறப்பு வாய்ந்தன. கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில் இத்தகு பழம்பெரும் சிறப்புக்கள் வாய்ந்தவொரு திருத்தலமாகும். இன்று கிழக்கு வாழ் இந்து மக்களின் புராதன அடையாளமாக இவ்வாலயம் திகழ்கின்றது. இதனால் திருக்கோவில் ஒரு தேசத்துக் கோயிலாகச் சிறப்பிக்கப்படுகின்றது. ஆறுமுகக் கடவுளை மூலமூர்த்தியாகக் கொண்ட இத்தலத்தின் வழிபாட்டில் வேல் முக்கியம் பெறுவதால் ‘சித்திரவேலாயுதர்’ என ஆறுமுகன் அழைக்கப்படுகின்றார். இருப்பினும் இத்தலத்தின் கருவறையில் ‘வேல்’ வைத்து வழிபடப்படுவதில்லை. ஆறுமுகனின் விக்கிரகமே வள்ளி, தெய்வானையுடன் மூலஸ்தானத்தில் காட்சி தருகின்றது. முருகனின் வேலாயுதம் எழுந்தருளியில் வைத்து வழிபடப்படுகின்றது.

இத்தலத்தின் பெருமைகள் அது பற்றிக் கூறப்படும் பழமை மிக்க ஐதீகக் கதைகள், நம்பிக்கைகள், அற்புதங்கள், நூல்கள் ஆகியவற்றினால் பறைசாற்றப்படுகின்றன. இருப்பினும் இவற்றை விட இவ்வாலயத்தில் உள்ள தொல்பொருட்கள் இத்தலத்தின் பெருமையையும், தொன்மையையும் வெளிப்படுத்தும் முக்கிய ஆவணங்களாகும். கல்வெட்டுக்கள், எழுத்துக்கள் பொறித்துள்ள தூண்கள், பழைய விக்கிரகங்கள், பூசைப்பொருட்கள் ஆகியன இவ்வாலயத்தின் தொன்மையைக் காட்டி நிற்கும் தொன்மங்களாகும். இவற்றுள் இங்குள்ள கல்வெட்டுக்களும் தூண்களும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய சிறப்பு வாய்ந்தனவாகும். அவை தொடர்ச்சியான ஆய்வுக்குட்படுத்த வேண்டியவையாகும்.

## கல்வெட்டுத் தொன்மை

இங்குள்ள கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை ஆலய நிர்வாகத்தினரால் ஆலயத்தினுள் அமைக்கப்பட்டுள்ள அரும்பொருட்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களில் தமிழ் எழுத்துக்களே பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வரும்பொருட்காட்சிச் சாலையில் 12 கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள் 3 கல்வெட்டுக்களில் உள்ள வாசகங்கள் பல ஆய்வாளர்களால் வாசிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும் ஏனைய கல்வெட்டுக்களில் உள்ள செய்திகள் வெளிவராமலேயே இருந்தன.

## இலக்கிய ஆய்வுகள்

கடந்த 2012 ஒகஸ்ட் 05ஆம் திகதி இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரினதும், உத்தியோகத்தரினதும் உதவியுடன் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் தலைமையில் சென்ற

குழு இங்குள்ள கல்வெட்டுக்களில் உள்ள எழுத்துக்களை ஆராய்ந்ததோடு ஆலயத்தின் பிற இடங்களில் உள்ள வாசகங்கள் பொறித்துள்ள கல்வெட்டுக்களையும் கண்டறிந்தது.

இங்குள்ள கல்வெட்டுக்களில் எழுத்துக்கள் தெளிவாக உள்ள கல்வெட்டுக்கள் மூன்றாகும். இவற்றைப் பேராசிரியர் சி. பத்மநாதன் வாசித்து அதில் உள்ள செய்திகளை தெளிவு படுத்தினார். இக்கல்வெட்டுக்கள் யாவும் ஒரே காலத்துக்குரியனவன்று எனத் தெரிவித்த பேராசிரியர் அதில் உள்ள செய்திகள்,‘ஆலயத்தோடு தொடர்புடைய மன்னர்கள், ஆலயத்திற்கு மன்னர்கள் அல்லது வள்ளல்களால் கொடுக்கப்பட்ட மானியங்கள், ஆலயத்தின் எல்லை, காலவரையறைகள்’ என்பனவற்றை வெளிப்படுத்துபவன எனவும் தெரிவித்தார்.

படங்கள் 05, 06 இல் உள்ள கல்வெட்டு ஆலயத்துக்குக் கொடுக்கப்பட்ட தானம் தொடர்பானது. இது 14 – 16ஆம் நூற்றாண்டுகளுக்குரியது எனப் பேராசிரியர் சி. பத்மநாதன் குறிப்பிட்டார். நான்கு அடி பதினொரு அங்குலம் உள்ள இத்தூணின் நான்கு பக்கமும் வேலைப்பாடுகள் உண்டு. இரு பக்கங்களில் கிட்டத்தட்ட 40 வரிகளில் எழுத்துக்கள் உள்ளன. மற்றைய இரு பக்கங்களிலும் குறியீடுகள் உள்ளன. அவற்றில் ஒன்று திரிசூலம், மற்றையது மயில். எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள பக்கங்களின் ஒன்றின் ஆரம்பத்தில் சூரியனதும், சந்திரனதும் படங்கள் உள்ளன. இதில் உள்ள செய்தி,

> ‘‘சிறிசங்கபோதி பருமரான திரிபூவன சக்கிரவர்த்திகள் சிறி விசயவாகு தேவர்க்கு ஆண்டு பத்தாவதில் தை மாதம் 20ந் திகதி சிவஞான சங்கர கோவிலுக்கு கொடுத்த வோவில. இதை தன்மத்துக்கு அகித்தம் செய்தானாகில் கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தைக் கொள்ளக் கடவராகவும்’’ என்பதாகும்.

எனவே இவ்வாசகம் ஆலயத்திற்குக் கொடுக்கப்பட்ட தானம் அல்லது மானியம் தொடர்பானது.படம் 07இல் உள்ள கல்வெட்டு சற்சதுரமானது. இரண்டு அடி நீளமும், இரண்டு அடி அகலமும் கொண்டது. இதில் உள்ள எழுத்துக்கள் தெளிவாக வாசிக்கக் கூடியனவாக உள்ள போதும் தொடர் வாக்கியங்களாக அமைத்து வாசிக்கக் கூடியதாகயில்லை. அத்தோடு கல்வெட்டின் இறுதி வாசகங்கள் முற்றுமுழுதாக சிதைவடைந்துள்ளதால் எழுத்துக்களை இனங் காணமுடியவில்லை. இருப்பினும் இக்கல்வெட்டு 15ஆம் அல்லது 16ஆம் நூற்றாண்டுக்குரியதாக இருக்கலாம். இக்கல்வெட்டிலே உள்ள,

> ‘‘சங்கபொதி,திரிபுவன சக்கரவர்த்திகள், சிவஞான சங்கர, ஸ்ரீ விசயவாகு தெவகு யா, திருக்கோயில் சித் வெ லாயுத சுவாமி கொயி...இளக்கு’’

போன்ற சொற்கள் வாசித்தறியப்பட்டன. தொடர் வசனங்களாக இவை இல்லை. இருப்பினும் இக்கல்வெட்டு ஆலயத்தோடு தொடர்புடைய அரசர்கள், நிவந்தங்கள் பற்றிய செய்திகளை ஓரளவு வெளிப்படுத்துகின்றது என்பது தெளிவு.
படம் 8 இல் உள்ள கல்வெட்டு 17ஆம் அல்லது 18ஆம் நூற்றாண்டுக்குரியது. இதில் ‘‘சகாப்தம், 1674...... நெல்லுக்கு அரைவாசி யில்லை’’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு அடி உயரமும், எட்டு அங்குல அகலமும் கொண்ட இக்கல்வெட்டில் ஆறு வரிகளிலேயே இவ்வெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆலயத்திற்கு வரவேண்டிய ஒரு வருமானத்தின் வரையறைக்குரிய சாசனமாக இது இருக்கலாம் எனத் தெரிகின்றது.

வாசிக்கப்படாத ஏனைய ஒன்பது தூண்களிலும் எழுத்துக்கள் இருப்பதை பேராசிரியர் இவ்வாய்வின் போது கண்டறிந்தார். அவை யாவும் தெளிவற்ற வகையில் காணப்பட்டன. (படம் 09) சில கல்வெட்டுக்கள் எண்ணெய் பூசி சுத்தம் செய்து எழுத்துக்கள் இனங்காணப்பட்டன. இருப்பினும் ஆழமின்றி எழுதப்பட்ட எழுத்துக்கள் மிகவும் சிதைவடைந்து காணப்பட்டதனால் வாசகங்களை பூரணமாக வாசிக்க முடியவில்லை. சில தூண்களில் சுண்ணாம்புப் பூச்சு பூசப்பட்டுள்ளது. (படம் 10) அச்சுண்ணாம்பு பூச்சினை அகற்றி முறையான இரசாயன பதார்த்தங்களைப் பூசி படியெடுக்கையில் எழுத்துக்களை சிரமமின்றி வாசிக்க முடிவதோடு ஆலயம் தொடர்பான மேலும் பல தொன்மையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துக்கள் தெளிவில்லாத சாசனங்கள் தூண்களாக பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சில அலங்கார வேலைப்பாடுகள் கொண்டவை. அவை பழைய ஆலயத்தின் திருச்சுற்றாலைத் தூண்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது. இவை 10 – 12 ஆம் நூற்றாண்டுக்குரியவை. சம காலத்து தமிழகக் கோயில்களின் கட்டடக்கலையின் தாக்கம் இவற்றில் காணப்படுகின்றன. அதிக

வேலைப்பாடுகள் நிறைந்துள்ள அத்தூண்கள் நேர்த்தியானவை. இவற்றில் தாமரை மலர்கள் அதிகம் செதுக்கப்பட்டுள்ளன. இத்தூண்களில் நான்கு ஒத்த தன்மை கொண்டவை. அவை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேற்பகுதியும், கீழ்ப்பகுதியும் ஒரே தன்மையானவை. நான்கு புறமும் தாமரைமலர்களால் செதுக்கப்பட்ட அமைப்பு தூணின் மேலும், கீழும் காணப்படுகின்றது. நடுப்பகுதி எண்கோண வடிவில் காணப்படுகின்றது. (படங்கள்11,12) இவ்வெண்கோணப் பகுதியில் எழுத்துக்கள் காணப்படுகின்றன.

அலங்காரம் கொண்ட ஐந்தாவது தூண் துண்டமாக்கப்பட்ட தூண் என்பதால் அதன் முழு அலங்கார அமைப்பையும் அறிய முடியவில்லை. எஞ்சிய பகுதியில் பலாப்பொத்தி அல்லது தாமரை இதழ் போன்ற வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. ஏனைய நான்கு தூண்களும் சுண்ணாம்பு பூச்சு பூசப்பட்டவை. அதிக அலங்கார வேலைப்பாடுகள் அற்றவை. (படம் 13)

இத்தூண்களை நோக்கும் போது ஆரம்ப காலங்களில் முருகக் கடவுளுக்கு ஆகம முறைப்படி அமைந்த மிகப் பெரிய ஆலயமொன்று இங்கு இருந்திருக்கின்றது எனப் பேராசிரியர் சி. பத்மநாதன் இதன் போது குறிப்பிட்டார். இவ்வாலயம் பற்றிக் குறிப்பிடும் குலரோஸ் அடிகள்,‘‘போர்த்துக்கீசர் இலங்கையில் தம் ஆட்சியின் போது பல நூற்றுக்கணக்கான இந்து ஆலயங்களை அழித்தனர். அவற்றுள் திருக்கோவிலும் ஒன்று. அவர்கள் அழிக்கும் போது அங்கு மூன்று கோபுரங்கள் இருந்தன, அவை அசவீடோவினால் அழிக்கப்பட்டுவிட்டன’’ எனக் குறிப்பிட்டிருக்கின்றார். எனவே பல நூற்றாண்டுகளுக்கு முன் திருக்கோவில் மிகப் பெரிய ஆலயமாக விளங்கியுள்ளது என்பதை இவர்களின் கூற்றுக்கள் தெளிவு படுத்துகின்றன.

அரும்பொருட்காட்சியகத்தில் உள்ள தொல்பொருட்களை விட ஆலயத்தின் வெவ்வேறு இடங்களிலும் பல சாசனங்கள் காணப்படுகின்றன. அவை ஆலயத்தின் பல தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. தேங்காய் உடைப்பதற்கு, கற்பூரம் எரிப்பதற்கு என அவை பயன்படுத்தப்படுகின்றன. (படங்கள் 14, 15) தேங்காய் உடைப்பதற்கு ஒரு அடி நீளமும் ஒரு அடி அகலமும் உடைய சிறு கற்துண்டம் பயன்படுத்தப்படுகின்றது. இதிலும் எழுத்துக்கள் உள்ளன எனப் பேராசிரியர் குறிப்பிடுகின்ற போதிலும் கருநிறம் பிடித்து பழுதடைந்துள்ளதால் அதிலுள்ள வாசகங்கள் தெளிவாக வாசிக்கக் கூடியதாகயில்லை.

மேலும் ஆலயத்தின் அதிஸ்டானம், கோமுகி ஆகியவற்றிலும் எழுத்துக்கள் காணப்படுகின்றன. (படங்கள் 16, 17) அதிஸ்டானத்தில் வர்ணக்கலவைப் பூசப்பட்டுள்ளதனால் அதில் உள்ள எழுத்துக்களை வாசிக்க முடியவில்லை. ஆனால் அதிஸ்டானம் முழுவதும் எழுத்துக்கள் இருப்பதாக பேராசிரியர் குறிப்பிட்டார்.

இதுபோல் ஆலயத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள தீர்த்தக் கிணற்றில் தமிழ் எழுத்துக்களில் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது. 1854 ஆம் ஆண்டை அத்தமிழ் எழுத்துக்கள் குறித்து நிற்கின்றன.

## முடிவுரை

கிழக்கிலங்கையின் தென்பகுதியில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் போன்று தொன்மை வாய்ந்த தலமாக இத்திருக்கோவில் சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயம் காணப்படுகின்றது. இங்குள்ள கல்வெட்டுக்களும் தூண்களும் ஆரம்ப காலத்தில் மிகப்பெரிய ஆலயமொன்று இங்கு இருந்திருக்கின்றது என்பதனை தெளிவு படுத்துகின்றது. சமகாலத் தமிழ் நாட்டுக்கு நிகராக இத்தலம் இருந்திருக்கின்றது என்பதனையும் இவை காட்டி நிற்கின்றன. இத்தகைய புராதனமிக்க ஆலயங்கள் பல கிழக்கிலங்கையில் உள்ளன. அவற்றின் தொன்மங்கள் ஆராயப்படும் போது மட்டுமே அத்தலங்களின் இருப்பும், சிறப்பும் வலுப்பெறும். இதனைக் கருத்திற் கொண்டு இத்தகைய ஆலயங்களை நிர்வகிக்கும் நிர்வாகத்தினரும், ஊர் மக்களும் ஆலயத்திலுள்ள தொன்மங்களை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்வதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அத்தியாவசியமானவொன்று.

திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத்தின் பல சாசனங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்ற போதிலும் பல சாசனங்கள் ஆலயத்தின் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றமை வேதனைக்குரியது. அவை மீட்கப்பட வேண்டும். அவற்றைச் சுத்தப்படுத்தி அங்குள்ள அரும்பொருட்காட்சியகத்தில் பராமரிக்கப்படல் வேண்டும். இதனால் அவற்றில் உள்ள வாசகங்கள் வாசிக்கப்படுவதோடு ஆலயத்தின் தொன்மைச் சிறப்புக்களும், பெருமைகளும் மேலும் வளர்ச்சி பெறும்.

**ஆய்வுக்குதவியவை**

முதனிலைத் தரவுகள்

01. களவாய்வு, 05.08.2102, 9.00 – 4.00
02. நேர்காணல், ஆலய பிரதம பூசகர், 06.08.2012, 10.00 – 12.00

இரண்டாம் நிலைத்தரவுகள்


01. கந்தையா,வி.சீ., 1964, மட்டக்களப்புத் தமிழகம்,ஈழகேசரிப் பொன்னையா நினைவு மன்றம்
02. கந்தையா,வி.சீ., 1983, மட்டக்களப்பபுச் சைவக்கோயில்கள் 1, கூடல் வெளியீடு.
03. கந்தையா,வி.சீ., 1991, மட்டக்களப்பபுச் சைவக்கோயில்கள் 2, கூடல் வெளியீடு.
04. கமலநாதன்,சா.இ., 2005, மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், குமரன் புத்தக இல்லம்
05. நடராசா,எப்.எக்ஸ்.சி., 1962, மட்டக்களப்பு மான்மியம், கலாநிலைய வெளியீடு.
06. வெல்லவூர்க்கோபால், 2005, மட்டக்களப்பு வரலாறு, மனுவேதா வெளியீடு

**ஆலயத்தின் அரும்பொருட்காட்சியகமும் அங்குள்ள கல்வெட்டுக்களும்** (படம் 01,02)



படம் 01




படம் 02

**பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் தன் குழுவினருடன் ஆலயத்தில் உள்ள கல்வெட்டு வாசகங்களை வாசிக்கின்றார்** (படம் 03,04)



படம் 03



படம் 04



படம் 05



படம் 06



படம் 07



படம் 08

**மா பூசி படியெடுக்கப் பட்ட சாசனம் ஒன்று**



படம் 09

**சுண்ணாம்பு பூசப்பட்ட தூண்களில் ஒன்று**



படம் 10



படம் 14



படம் 11



படம் 15



படம் 12



படம் 16



படம் 13



படம் 17